**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டுர்.**

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L.,

நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டுர்.

2026ஆம் வருடம் ஜூலை மாதம் 06ம் தேதி, திங்கட்கிழமை

**C.C.No.214/2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், மேட்டூர் காவல் நிலையம்,

**குற்ற எண்.5/2025. பிரிவு.306 BNS** ...**புகார்தாரர்**

**–எதிர்–**

1) மணிகண்டன், த/பெ.சின்னன்னன்

2) ஸ்ரீதர், த/பெ.ராமசந்திரன் ...**எதிரிகள்**

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திருமதி.அனு ராதா அவர்கள் முன்னிலையாகி அவரது வாதங்கள் கேட்கப்பட்டும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாரதி அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரீசிலணை செய்தும் இந்த நீதிமன்றம் வழங்கும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. இந்த வழக்கின் இரண்டு எதிரிகளும் ஆஜர். இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் வழக்கை தனித்தனியாக நடுத்துவதில் ஆட்சேபணை ஏதும் இல்லை எனத்தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட 'திரிவேணி கார் கம்பெனி பிரைவேட் லிமிடெட்' என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் முதலாவது எதிரி மணிகண்டன் மற்றும் இரண்டாவது எதிரி ஆகிய இருவரும், இந்நிறுவனத்திற்கு வரும்

வாடிக்கையாளர்களிடம் உரிய ரசீது வழங்காமல், அவர்களிடம் பெற்ற பணத்தைக் கையாடல் செய்து மோசடி செய்ததாக இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

3. மேற்படி முதல் தகவல் அறிக்கையை இந்நீதிமன்றம் உற்று நோக்குகையில், இதில் இருவேறு சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது தெளிவாகிறது. முதலாவது எதிரி மணிகண்டனைப் பொறுத்தமட்டில், அவர் கடந்த 28.12.2024 அன்று வாகனம் ஒன்றை பழுதுபார்த்து, அன்று மாலை 'பூஜ்ஜிய கட்டணப் பட்டியல்' (Zero Bill) தயாரித்து, வாடிக்கையாளரிடமிருந்து பழுதுபார்ப்புக் கட்டணமாக ரூபாய் 6,667/- ஐ தனது தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு மாற்றச் சொல்லிக் கையாடல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதே வேளையில், இரண்டாவது எதிரியைப் பொறுத்தமட்டில், அவர் கடந்த 01.01.2025 அன்று மற்றொரு வாடிக்கையாளரின் வாகனத்திற்கு 'வீல் கப்' (Wheel Cup) மாற்றிக் கொடுத்து, அதற்குரிய தொகையான ரூபாய் 300/- ஐ அந்த வாடிக்கையாளரின் வங்கி கணக்கிலிருந்து தனது சொந்த வங்கி கணக்கிற்கு மாற்றச் சொல்லிக் கையாடல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

4. இவ்வாறு இருவேறு சம்பவங்கள் வெவ்வேறு தேதிகளில், வெவ்வேறு நபர்களால் தனித்தனியாகச் செய்யப்பட்டுள்ள போதிலும், அவை ஒரே முதல் தகவல் அறிக்கையாகப் பதிவு செய்யப்பட்டு, ஒரே புலனாய்வு அதிகாரியால் புலனாய்வு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் கடந்த 23.05.2025 அன்று **பாரத நீதிச் சட்டம், 2023-இன் கீழ் 306** எதிரிகள் இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டு, இவ்வழக்கு ஆண்டு பட்டிகை வழக்கு எண். 214/2025 (C.C. No. 214/2025) ஆகக் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

5. வெவ்வேறான வழக்கு மூலங்களின் (Distinct causes of action)

அடிப்படையில் நிகழ்ந்துள்ள இவ்விரு சம்பவங்களையும் எப்போது ஒன்றாக இணைத்து விசாரணை செய்யலாம் என்பது குறித்து **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம், 2023–இன் பிரிவு 246** மற்றும் அதன் தொடர்புடைய பிரிவுகளை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்தது. அப்பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ள சட்டக் கூறுகள் இவ்வழக்கின் சங்கதிகளுக்குப் பொருந்துமா என்று ஆய்வு செய்தபோது, மேற்படி எதிரிகள் இருவரும் கூட்டாக இணைந்தோ அல்லது பொதுவான நோக்கத்துடனோ இக்குற்றத்தைச் செய்யாத சூழ்நிலையிலும், வேறு வேறு தேதிகளில் இக்குற்றங்கள் தனித்தனியாகச் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையிலும், மேற்படி குற்றச்சாட்டுகளை ஒன்றிணைக்கும் சட்டப்பிரிவுகள் இவ்வழக்கிற்குப் பொருந்தாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. மேலும், புகார்தாரர் ஒரே நபர் என்ற ஒரே காரணத்திற்காக, இருவேறு நபர்களால் வெவ்வேறு தேதிகளில் தனித்தனியாகச் செய்யப்பட்ட இருவேறு சம்பவங்களை ஒரே வழக்காக விசாரிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றும், அது தரப்பினருக்குப் பெருமளவு பாதிப்பையும் பாரபட்சத்தையும் (Prejudice) ஏற்படுத்தும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, நீதியின் நலன் கருதி, மேற்படி பதிவு செய்யப்பட்ட வழக்கினை இரு எதிரிகளைப் பொறுத்து தனித்தனியாகப் பிரித்து (Split–up) விசாரிக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அதன்படி, முதலாவது எதிரியைப் பொறுத்து பிரிக்கப்படும் வழக்கில் இவ்வழக்கின் அசல் ஆவணங்களையும் , இரண்டாவது எதிரியைப் பொறுத்து பிரிக்கப்படும் வழக்கில் இவ்வழக்கு ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களையும் (Certified Copies) கோப்பில் வைத்து, அந்த அந்த சம்பவங்களைப் பொறுத்து வழக்கு விசாரணையைத் தொடர உத்தரவிடப்படுகிறது.

மேலும், இரண்டாவதாகப் பிரிக்கப்பட்ட வழகிற்குப் புதிய ஆண்டுபட்டிகை

வழக்கு எண் வழங்கி, அதனைத் தனியாகப் பதிவு செய்யுமாறு இந்நீதிமன்றத்தின் தலைமை எழுத்தருக்கு (Chief Ministerial Officer) இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

மேலே கண்ட உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குத் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தங்களுக்குப் பின், இன்று **06.07.2026** ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.06 19:48:53 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1, மேட்டூர்.**